திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புதியதாக துவக்கப்பட உள்ள 3 மாவட்டங்களில் பழப் பண்ணை அமைப்பதில் ஆகும் செலவு எவ்வளவு? மற்ற மாவட்டங்களில் ஏற்கனவே துவங்கப்பட்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கும் பழப் பண்ணைகளுக்கு ஆகிய செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, செலவினங்கள் பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பழப் பண்ணையை பெரியார் மாவட்டத்தில் புதியதாக ஆரம்பிக்கப் போவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பெரியார் மாவட்டத்தில், எந்த வட்டத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது? எத்தனை ஏக்கர் பரப்பளவில் இந்தப் பழப் பண்ணை ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் வட்டத்தில் மோதூரில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. நிலம் கையகப்படுத்துகின்ற பணி இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது பற்றிய முழு விவரம் வந்த பிறகு அறிவிக்கப்படும்.

தாளவாடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் காபி பயிர் செய்யும் திட்டம்.

321—(*வினா எண். 21626)—திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாளவாடி ஊராட்சி ஒன்றியம், கோட்டாடை, மாவள்ளம், பெஜலட்டி போன்ற பகுதிகளில் காபி பயிர் செய்யும் திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், காபி வாரியத்தின் பங்கு இதில் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) காபி பயிர் செய்வது குறித்த தனியொரு திட்டம் ஏதுமில்லை. மலைப் பகுதிகளில் தோட்டக்கலை மேம்பாடு திட்டத்தின் கீழ் ஏனைய தோட்டக்கலை பயிர்கள் விநியோகத்துடன், காப்பி நாற்றுக்களும் விநியோகிக்கப்படுகின்றன.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 15]

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காப்பி பயிர் செய்கின்ற பகுதிகளில் அந்த நிலங்களில் தொடர்ந்து பல காலமாக காப்பி பயிர் செய்து வருவதால் உற்பத்தித் திறன் மிகவும் குறைந்து இருப்பதாகவும், என்னுடைய தொகுதியான சத்தியமங்கலம் தொகுதியில் கோட்டாடை, மாவள்ளம், பெஜலட்டி போன்ற பகுதிகளில் ஏற்கனவே தோட்டக்கலை மூலமாக காப்பிச் செடிகள் கொடுக்கப்பட்டு, அவற்றை வீடுகளில் பயிர் செய்வதன் காரணமாக, நல்ல விளைச்சல் கிடைத்து இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அந்த அடிப்படையில் அந்தப் பகுதிகளில் காப்பி பயிர் செய்ய அதிக கவனம் செலுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தோட்டக்கலைத் துறை அத்தகைய ஏற்பாடுகளைத்தான் செய்து கொண்டு இருக்கிறது. ஏறத்தாழ மொத்தம் 10 000 காப்பி நாற்றுகள் அந்தப் பகுதியில் விநியோகிக்கப்பட்டு இருக்கின்றன. தொடர்ந்து அந்த முயற்சியில் ஊக்கம் தருகின்ற வகையில் துறை செயல்படும்.

திரு. ஆர். ரங்கசாமி : தலைவர் அவர்களே, அங்கே அதிக நிலங்களில் காப்பி பயிர் செய்ய அரசு ஊக்கம் அளிக்கின்ற வகையில் அந்தப் பகுதி மக்களுக்கு கடன் வசதியோ அல்லது அரசு மானியமோ, அல்லது உதவியோ செய்து கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 50 சதவீதம் மானியம் ஏற்கனவே வழங்கப்படுகிறது.

திரு. சீ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, [மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காப்பி பயிர் செய்வதைப்பற்றிச் சொன்னார்கள். அங்கேயுள்ள விவசாயிகளுக்கு இலவசமான முறையில் காப்பி நாற்றுகள் வழங்குவதற்கு வசதியான முறையில் அந்தப் பகுதியில் காப்பி நாற்றங்கால் பண்ணை அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இப்போதுள்ள திட்டப்படி, சின்னகல்ராயன் மலைப்பகுதியில் 90 ஏக்கர் பரப்பளவில் மாதிரி காப்பித் தோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறது.

தொண்டாமுத்தூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டும் திட்டம்]

322—(*வினா 21649)—திரு. மா. சின்ராசு : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் தொண்டாமுத்தூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டும் திட்டம் உள்ளதா ?

(ஆ) இத்திட்டம் எப்பொழுது முடிவுறும் ?